உ
சிவமயம்
ஓம் நல்லூரானடி போற்றி

# நல்லூர் கந்தரநுபூதி



சைவப்புலவர்

திவ்யாதங்கன் வ. ஆ. தங்கமயில் (M.A)


வெளியீடு
உலக சைவத்திருச்சபை - இலங்கை
01.09.2016

உ

சிவமயம்

ஓம் நல்லூரானடி போற்றி

# நலநய கந்தரநுபூதி





சைவப்புலவர் திவ்யாதங்கன் வ. ஆ. தங்கமயில் (M.A)

வெளியீடு

உலக சைவத்திருச்சபை - இலங்கை

01.09.2016

உ
சிவமயம்

# மகாதேவா ஆசிரமம்

ஜெயந்திநகர், கிளிநொச்சி.



## ஆசியுரை

திருவருள் சுரக்க வேண்டும் என்றால் குருவருள் கைகூட வேண்டும். தெட்சணாமூர்த்தி தத்துவம் இதனையே உணர்தர்துகின்றது. திருவருள், திவ்யாதங்கன் வ. ஆ. தங்கமயில் அடியார்க்கு அடியவனாகத் தன்னை நெறிப்படுத்திக் கொண்டவர் தமிழ்ப் பண்டிதர், சைவசித்தாந்த பண்டிதர், இலக்கணத் தெளிவுடையவர். இவரின் இறையியல் முயற்சிகள் வளரவேண்டும். **"நலநய கந்தரநுபூதி"** என்னும் அநுபூதி நூலை அருளியுள்ளார் என்பது அறிந்து அகமகிழ்வு அடைகின்றேன்.

உலக சைவத் திருச்சபை - இலங்கை, சைவர்களை சைவசமயி என்ற நிலைத்து உயர்துவதற்கு பல கோணங்களில் பணியாற்றி வருகின்றது. அவ்வகையில் "நலநய கந்தரநுபூதி" என்ற நூல் வெளியிட முன்வந்தமையை எண்ணி பெருமகிழ்வடைகின்றேன். அனைவரும் இந்நூலைக் கற்றுணர்ந்து இறையின்பம் பெற நல்லைக் கந்தன் அருள்புரிய வேண்டுகின்றேன். இவையாவும் திருக்கைலாயன் திருவருளேயாகும் என்று உணரச் செய்த என்குருநாதன் தாழ் பணிந்து ஆசியுரை கூறுவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

வணக்கத்திற்குரிய
தவத்திரு கணேசானந்தம் மகாதேவ சுவாமிகள்
பீடாதிபதி

இலங்கை மனித உரிமைகள் அமைப்பு, வடமாகாணப் பணிப்பாளர் அவர்கள் வழங்கிய

# வாழ்த்துரை

அன்புள்ளம் கொண்ட சைவ மெய்யடியார்களே! வாசிப்போம், சிந்திப்போம், செயற்படுவோம்

மனித இனம் மட்டும் பிறந்த நேரம் கணித்து, நட்சத்திரம் பார்த்து, பெயர்வைத்து ஒவ்வொரு மனிதனையும் அப்பெயரால் அழைப்பார்கள். இவ்வகை வேறு எந்த உயிரினங்களின் இனப்பெருக்க வளர்ச்சியிலும் இல்லை என்பது எல்லோரும் அறிந்த விடயம். சிந்திக்கும் ஆற்றல் அதற்கேற்ப செயற்பாடுகள், அதனால் ஏற்படும் விளைவுகள் அனைத்தையும் அனுபவிக்கும் பிறவிதான் மனிதப்பிறவி. மனிதப் பிறவியில் இறைவழிபாடு முன்னுரிமை பெறுகின்றது. காலத்திற்குக் காலம் மனிதனின் நாகரிக வளர்ச்சியினால் (பண்பாடு) நடையுடைபாவனை, ஒழுக்கச் செயற்பாடுகள் அனைத்தும் மாறுகின்ற தன்மையைக் காணமுடிகின்றது. ஆனால் இறைவனை வணங்கும் முறைகளில் ஆகமம் சார்ந்த, ஆகமம் சாராத என்ற இரு முறைகளைத் தவிர வேறு மாற்றங்கள் எதுவுமில்லை. கடையிற் சுவாமிகள், செல்லப்பா சுவாமிகள், யோகர் சுவாமிகள் ஆகியோரின் வாழ்க்கைத் தடங்கள் எமக்கு நன்னெறியைப் போதிக்கின்றன. இவர்கள் புனித பூமியாகிய நல்லூரில் நடமாடிய தெய்வங்களாவர். இதனை மனிதர்கள் உணரவேண்டும். குருசிஷ்ய பரம்பரை வரலாற்று உண்மையாகும். இதனை அனைவரும் நன்கு உணர வேண்டும். இவ்வகையாக உலக சைவத்திருச்சபை - இலங்கை அமைப்பின் நோக்கம் ஒவ்வொரு சமயத்தவரும் அந்தந்தச் சமயங்களின் நெறிமுறைகளைக் கடைப்பிடித்து ஒழுக வேண்டும் என்பதேயாகும்.

சைவசமயத்தில் பிரவேச சமய தீட்சை பெற்ற ஒருவர் சைவசமயி என்று சொல்லுகின்ற பக்குவம் பெறுவர். மூன்று தொடக்கம் ஏழு வயதிற்குள் இத்தீட்சையைப் பெறுவது உத்தமமாகும். தவறியவர்கள் காலங்கடந்தாவது பெற்றுக்கொள்ள வேண்டும். திவ்யாதங்கன் வ.ஆ.தங்கமயில் அவர்கள் தீட்சையால் உயர்ந்தவராவார். மக்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்கின்றார். கந்தன் கழலடியைப் பற்றிப் பிடித்துக் கொண்டதால் "நலநய கந்தரநுபூதி" என்னும் நூலை அருளியுள்ளார். இந்த நூலை உலக சைவத்திருச்சபை - இலங்கை வெளியிட முன்வந்தமை சைவ மக்களின் நற்பிரார்த்தனையே ஆகும். அனைத்து மக்களும் இந்நூலைப் பெற்று கந்தனருள் பெறவேண்டுமெனவும் இந்நூலை அருளிய அருளாளர் அவர்கள் இன்னும் பல நூல்களை அருளுவதற்கு திருக்கைலாயம் திருவருள்புரிய வேண்டுமெனவும் பிரார்த்தித்து வாழ்த்தி இவ்வுரையை நல்லைக் கந்தன் திருப் பாதங்களுக்குச் சமர்ப்பிக்கின்றேன்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்."

கலாநிதி வைத்திலிங்கம் சிவராஜா
வடமாகாணப் பணிப்பாளர்

உ
சிவமயம்

# உலக சைவத்திருச்சபை - இலங்கை

பெருங்குளம், சங்கத்தானை வீதி, சாவகச்சேரி.

## வெளியீட்டுரை

"நலநய கந்தரநுபூதி" என்னும் நூலை அருளியுள்ள இறையன்பர் திவ்யாதங்கன் வ.ஆ.தங்கமயில் ஞானநெறி கைவரப் பெற்றவர். இறை அருளாளர்களின் நிலை சிஷ்யனூடாகவேதான் வெளிவருவது, சைவசித்தாந்த சந்தான குரவர் வரிசையால் இவ்வுண்மை உணர முடிகின்றது. தம்பி கைலநாதன் பிரதீபன் அவர்கள் என்னுடன் தொடர்பு கொண்டு திருவருள் ஐயா கந்தரநுபூதி ஒன்று வைத்திருக்கின்றார். இதனை வெளியே கொண்டு வரவேண்டும் என்று கேட்டார். அந்தநாள்முதல் எனக்கு உணர்வுகள் பலவாகத் தோன்றின. இறுதியாக நூலுருக் கொடுப்பது சிறப்பாக அமையும் என எண்ண நல்லூர்க் கந்தன் உணரச் செய்தான். ஐயாவிடம் என்நிலையை தம்பி பிரதீபனூடாகத் தெரியச் செய்தேன். இவ்வகையாக கிடைத்த இந்நூல் "சுவிஸ் நாட்டில் நடந்த முருகபக்தி மாநாட்டிற்கு" சமர்ப்பித்த செய்தியையும் அறிந்தேன். எல்லாவற்றையும் வடிவேல் சுவாமிகளின் சமாதிக் கோயில் நிறுவுனரும், கணேசானந்த மகாதேவாசிரம பீடாதிபதியுமான கணேசானந்த மகாதேவ சுவாமிகளிடம் தெரியப்படுத்தினோம். இவ்வாறு அடியார் விபுலானந்தா சைவத்துறைத் தலைவர், உலக சைவத்திருச்சபை அவர்களுடனும் ஆலோசித்தபோது நூல்வடிவம் கொடுக்க ஆவன செய்யுங்கள் என்றார்கள். இன்று நல்லூர்க் கந்தன் அருளுக்குரித்தான தீர்த்தத்திருவிழா நன்நாளில் வெளியிட்டு நல்லூர்க் கந்தன் பாதக் கமலங்களில் சமர்ப்பிக்க திருவருள் புரிந்தமையை எண்ணி எண்ணி.....

இவ்வுரையை எழுதச் சந்தர்ப்பம் தந்த வெள்ளிப்பள்ளத்து வீரகத்திப் பிள்ளையார் திருப்பாதங்களையும் வணங்கி இறைஞ்சுகின்றோம். உலக சைவத்திருச்சபை - இலங்கை இந்நூலை வெளியிடு செய்து வைப்பதிலும் அனைவர் கையிலும் இருக்க வேண்டிய அருள் நூலாகும் என்ற செய்தியையும் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

அமைப்பாளர், ஈழவூர் சைவப் புலவர்
சிவஸ்ரீ. கதிர்குமாரசாமி சுமுகலிங்கம் ஐயா (M.A, J.P)

# அணிந்துரை

தாய் தந் தைதவத் தயவால் தரணியில்
தங்கம யிலாய் பிறந்துவ ளர்ந்து
நாயிற் கடியா னவன்பின் பிணைப்பில் துதைந்து
நால்வே தாகம பன்னிரு திருமுறைத்
தூயன் புபக்தித் தூண்டுத லுள்கித்
திவ்யவழி நாடித் திருயுங் காலை

உள்ளத்தில் தெளிந்துணர்ந்த உள்பொருளின் அருமை
பெருமைகளை உன்மத்தமாக உரைக்கத் தலைப்பட்டேன்
குழந்தை முயற்சி என்பேன் குறையிருப்பின் பொறுப்பீர்
நிறைவிருப்பின் நல்லூரான் அருளென்க.

இவண்,
திவ்யாதங்கன் வ.ஆ.தங்கமயில்.
(முதுகலைமாணி சித்தாந்தம் - இலங்கை)
பண்டிதர், சைவப்புலவர், சித்தாந்த பண்டிதர், Dip in Civil Engineering,Dip in Psy, Dip in HRD, Quantity Surveyor, Registered Licensed Surveyor &Leveller & Valuer FSI (Srilanka),A.M.S.S.T (UK)
தாரிக்கப்பற்று,
வதிரி,
கரவெட்டி,
வடமராட்சி.
யாழ்ப்பாணம்,
இலங்கை.

# உள்ளடக்கம்

1. ஆசியுரை

2. வாழ்த்துரை

3. வெளியீட்டுரை

4. அணிந்துரை

5. உள்ளடக்கம்

6. பக்தி நெறியின் சித்தர் நெறியில், தத்துவங்களில் முருகப்பெருமான்

7. நூல்

8. நூற்பயன்

9. கீர்த்தனைகள்

10. உசாத்துணை நூல்கள்

பதிப்புரிமை - ஆசிரியர், உலக சைவத்திருச்சபை - இலங்கை

உ
சிவமயம்
ஓம் குகாயநம

# பக்தி நெறியின் சித்தர் நெறியில், தத்துவங்களில் முருகப்பெருமான்

## அறிமுகம்

ஒரு திரு முருகன் வந்து ஆங்கு
உதித்தனன் உலகம் உய்ய எனின்
திருமால் மருகன் முருகன் இங்கு
தரணி காக்கும் தனிப்பபெரும் முதல்
சரியை கிரியை யோகம் ஞான
சதுர் பாகத்து யோகம் ஆவது
திரிந்து பக்தி யோக நெறியும்அ
தித கத யோக நெறியுமாம்.

சித்தம் சிவன்பால் சென்று
சிந்தை தெளிந்து சண்முக
சித்தர் சிதம்பர ரகஸ்யம் தெரியச்
சிந்தை லது வேண்டும் சிவ சிவ
ஏகாந்த பரவெளியில் ஏற்றிடும் முகமொன்று
எத்தேசத் தெவ்வரங்கும் ஏற்புடைய முகமொன்று
தேகாதி பிணி போக்கித் தேற்றிடும் முகமொன்று
தெய்வ நிலை தேக்கும் தேஜோ மயமுகமொன்று
பூதாதி ஐம்புல திரிகரண முக்குணம்
பூத்துக் கனிந்த சாத்துவிக முகமொன்று
பாதாதி கேசம் பழனி முருகனாய்ப்
பாசாணமாலாக்கும் போகர் முகமொன்று

வேதாகமம் கண்டும் காணாத மெய்
ஆதங்கமான சித்தர் நெறியொன்று
ஆதிதொட்டின்றும் அறிந்தும் அறியாது
ஆத்மார்த்த அந்தரங்க மருகன்பால்

கோதில் குறமகளும் கொய்யாப்பழ யானை
கோல மயிலழகும் கூவும் குக்குடமும்
ஆதிசிவசக்தி ஆழ்ந்தகன்ற கூர்வேலும்
ஆராதிக்க அவர்முன் தோன்றிடுமே

இத்தகைய தத்துவ இகபர வாழ்வுதரும்
ஈராறு கரத்தையன் ஐங்கரன் தம்பி
புத்திக்குப் புனித ஔவையின் புதுமையன்
பத்திநெறி சித்தர்நெறித் தத்துவபரிமாண
சித்தத்துள் சிவகுரு சிரித்து வேல்தாங்கி
சுத்த சைதன்ய சுகிர்ப்புள் சுழிவல
சக்திகளான இச்சா கிரியா ஞான
சதுர்வேத ஞானப் பழமுதிர் சோலையனே

உனை நான் உள்கி உலகுக்கு இன்று
உணர்த்தாவிடில் என் பிறப்பு விழலாம்
எனை நீ படைத்தாய் எல்லோர்க்குமா தங்க
எழில் மொழி தமிழ்வழி உனை வழுத்தவே!

## அவையடக்கம்

யாதும் ஊரே யாவரும் கேளிர்
யாப்பும் ஆக்கும நுபூதித் தூக்கும்
ஓதும் உலகின் ஓம்முரு கேசன்
ஓம்பும் சுவிசின் முருக பக்தி
மாநா டதனில் மாக்கரு ணையினால்
மாந்தும் மனதால் பாண்பநு பூதியை
ஆதங் கத்துடன் திவ்யா தங்கன்
ஆறிரு தடந்தோள் அண்ணல் பாதம்
தாம்தீம் திமியெனு தாளத் திசைவில்
தங்கம யிலுளத் தாதா மியத்தை
தாவித் தந்தோமி திற்குறை இருப்பின்
தயைவுடன் பொறுத்துத் தமிழ்மண் காக்க!

# நூல்

## காப்பு

1. ஒற்றை மருப்பன் ஓமிரு கர்ணன்
பற்றை ஒழிப்பன் பாலக ணேசன்
எற்றைக்கும்மிடர் எரிப்பான் முருகன்
வற்றா அநுபூ தியாக்க க்காப்பே

****

2. பழமே காலாய் பழமுதிர் சோலைக்
கிழவோன் ஆனவன் கிழவியின் சுட்டஅப்
பழத்தால் தெளிந்தும் பட்டசுட் டறிவின்
வழத்தில் மகிழுமெம் வடிவேற் கரசன்

3. கரமே கூப்பிக் காலும் வலமே
வரவே நெஞ்சம் வேலன் புகழ்பா
தரவே வாயும் தலையும் வாழ்த்த
சிரமேல் முருகன் சிற்றடி வைப்பான்

4. முருகன் மாலின் மருகன் அழகின்
முருகன் வேலின் முதல்வன் ஔவைத்
திருவன் சூலன் நுதலின் பொறியன்
அறுவன் சேர்வின் பிழம்பன் குமரன்

5. குமரன் பிரமன் குழப்பம் தெளிய
அமரர் சிறையில் அடைத்த பிணக்கால்
குமரன் சிவனின் குருவும் ஆகியே
அமரர் இடரை அழித்தான் முருகன்

6. முருகன் சூரபத் மர்உட லையிரு
உருவாய் பெயர்த்து கூவுசே வல்மயில்
திருவாம் பேற்றை திருவருள் செய்த எம்
குருவைப் போற்றி குறைகள் தீர்ப்போம்

7. கல்லாக் கருதாக் கசடன் நெஞ்சக்
கல்லை கனியவைக் கும்கும ரன்தாழ்
எல்லா நலமும் எமக்குத் தரவுல
கெல்லாம் தளிர்க்கும் கவலை விடுவாய்

8. பொல்லா வினையும் பொய்கள வொழுக்க
மெல்லாம் வரண்டிட இகபர ராட்சிய
மெல்லாம் திரண்டிவ் வேகாந் தசுகமே
யெல்லாம் தந்தருள்அறுமா முகனே

9. அறுமா முகனே அதிகூ ரபதுமர்
அறுத்தி ருகூறாய் ஆடும் மயிலும்
அறுதியி ட்டோலம திகாலை கூவுசே
வலுறுதி யாயாட் கொள்வன் எமையே

10. பெண்டிர் பிள்ளை பொருள்பண் டமெனும்
கொண்டிடு மாசை கோடிமண் பொன்னும்
மொண்டிடு கள்கா மமெலாமழிந்து
பண்டுவி னையறப்பாலா அருளே

11. முருகே உனக்கு முதலுமீ றுமதனால்
உருகா யுளத்தா லுலகர்க் குதவிமால்
மருகா னவனை மனதா லுடலால்
லுருகும் சொல்லா லிறுதிவ ரைசெய்

12. ஆத்மா அத்துவி தமான துண்மை
ஆத்மா விளக்கம் அறிந்தில மாதலால்
காத்தாண் டுகொள்ளும் கந்தன் கழலை
யாத்தாண் டநுபூ தியலேற் றிவாழ்

13. பரமாத்* மஜக்யம் பரமர கசியம்
பரமாத் மதெளிவு பரமஅ திசயம்
பரமாத் மஆத்ம பரிபா ஷையாம்
பரமர கசியப் பதிபசு இறையுயிர்

* பரவாத்மா

14. தடத்தம் சொரூபம் தகடுதத் தாளம்
இடத்துக் கிடமாய் இருமொழி பேசும்
மடத்தில் சுழகுதான் குல்லமாம் வயலில்
தடத்தப் பசுவே சொருபான் மாவாம்

இதுவமது

15. தடத்த சொரூப தகடுதத் தாளம்
இடத்துக் கிடமாய் இருமொழி பேசும்
மடத்தில் சுழகோ முறமாம் வயலில்
தடத்தப் பதியே சொரூப இறைவன்

16. பல்துறை மேன்மை பல்நூல் ஆக்கம்
பல்வகை யோகம் பல்கலைத் தேட்டம்
பல்வகை போகம் பல்வகை இன்பமாய்
எல்லை யில்பிற வியெய்திடு ம.·.தேன்?

17. இன்பம் வேண்டும் இப்பவும் வேண்டும்
என்பை உருக்கும் ஏற்றமும் வேண்டும்
அன்பை உளமது ஆண்டிட வேண்டும்
இன்பம் பேரின் பமாகிட வேண்டும்

18. துன்பம் வேண்டும் துயரமும் வேண்டும்
அன்பைப் பெருக்கும் ஆந்துணை வேண்டும்
அன்பே இறையாம் ஆந்துணை யாக்கிட
அன்புள் அன்பால் அன்பாய் அணையவை

19. இறைவா இனியும் இரங்கா திருந்தால்
குறைவாய்க் குறித்துக் குவலயம் கூவும்
மறைவாய் மறுத்து மறைந்து மாய்க்கும்
முறையா? முதலே முன்வா! முனிவாய்!

20. முருகா வள்ளியின் முன்பின் சென்றாய்
முருகா தங்கனுன் முன்பின் வந்தான்
வருவாய் என்றதும் வந்ததோ யானை
முருகா வுனக்கெனைக் காவா விடிற்பழி

21. மாம்பழம்* வேண்டிட மயில்மேல் பறந்தாய்
சாம்பலம்* வேண்டிநான் மயிலாய் பறக்கிறேன்
நாப்பழம்* வேண்டஒள வையை வருத்தினாய்
காய்ப்பழம்* வேண்டிலோம் கருதியெனைக்கா

*சாம்பலம் - இறப்புப்பலம்/ சாகும் பலம்
*நாப்பழம் - நாவல் பழம்
*காய்ப்பழம் - காயும் பழமும் (கிளித்தட்டு விளையாட்டில்)

22. நரைதிரை மூப்புடன் நலக்குறை யாச்சுதே
வரைதிறை யில்லா வளக்குறை யாச்சுதே
நிரைநிர லில்லா நிலமையு மாச்சுதே
துரைமுரு கையா துணையெனைத் தாங்குக

23. மறதியும் மயக்கமும் மதிகெடு மார்க்கமும்
பறதியும் பதட்டமும் பயப்படும் பாங்கினில்
உறவிலும் உலவிடும் உள்ளூர் உலகிலும்
உதவுவார் உனைவிட உளரோ உரைத்திடாய்!

24. அறுபடை வீடுடை அறுமுகத்தரசே
உறுவினை வீட்டிடும் உனதருள் வளமே
சிறுமதி வீழ்ந்திடும் சரவண பவனே
தறுதலை வீங்கிய தமியனைத் தணித்தருள்

25. குறுநடை போடும் குறத்தியின் பங்கா
வறுமை யாமென் வதைபடு நிலையை
முறுவலித் தேயென் முறைப்பா டுகளை
பொறுமை யாயறிந் துனகழல் தருவாய்

26. உரித்தார் கொல்புலி தோலுடுப் பாக்கியும்
சிரிப்பால் முப்புரம் சாய்ந்ததும் சிவனால்
சிரிப்பால் நாப்பழம் சுட்டதே உன்னால்
பிரித்திடி லென்நெஞ் சினுள்கும் முருகே.

* இங்கு வரவேண்டும்

27. கிழித்தவன் காட்டிய ஆழ்மன ராமனை
ஒழித்தவன் பாண்டுவின் ஆயிரம் புதல்வரை
விழிப்பேன் வாயுவின் ஆஞ்சன வீமராய்
பழிப்பிலான் மாவா யெனக்கருள் முருகா

28. உரிந்தது சேலை திரௌபதை உளறிட
விரிந்தது சேலை வியந்தனன் வீடுமர்
சரிந்ததா கற்புசா ரங்கன் சார்பால்?
புரிந்ததும் நம்பிக் கைவை மருகனில்

29. நம்பிக் கைப்பூ சைசெய ஔவை
தும்பிக் கைத்தூக் கால்கயி லைசெலும்
அம்மும் மம்ரக சியத்தால் முருகனைத்
தங்கம யிலனுடன் படுமா றாக்குமே

30. இயற்கை பொய்க்கு மியல்பு மெய்க்கும்
செயற்கை மெய்த்துச் சிறப்பும் வருமோ?
புயற்கைச் சுனாமியால் புவனம் கெட்டது
வியக்குமா றறுமுக மாமன் வராரோ

31. கந்தவே ழைக்கதி கொடுவல குக்கெனும்
சிந்தை கொண்டெது சார்பென ஆய்ந்துடன்
விந்தை யாகவியவிகா ரவினை
மந்தை எங்களை மேய்ப்பவ னருள்வரும்

32. ஆலய மணியின் ஓமெனு மோசை
காலையில் புள்ளின கானத் தினோசை
வேலையை தொடரும் வேகத் தினாவல்
வேலனை வணங்கி மாலையில் இசைக்கும்

33. கடலும் காற்றும் கானக் குயிலும்
இடப வாகன இறையருள் குவிக்கும்
நடன மாடும் நீலம யிலும்வேல்
இடமாய் சேவல் கூவும் இசைந்து

34. பிறப்பால் முன்பு பயின்ற தவத்தால்
திறப்பார் இன்று திருமால் மருகன்
குறிப்பால் என்றும் குவித்த மனத்தால்
பறிப்பார் என்றும் பழவினை அறவே

35. நடிப்பார் உலகினில் நல்லவ ராய்ச்சிலர்
பிடிப்பார் காலினைப் பற்றுள ராய்ச்சிலர்
அடிப்பார் வயிற்றினில் ஆற்றொணா ராய்ச்சிலர்
பிடிப்பேன் முருகனைப் பித்தனாய் காவெனை

36. அலகில் அருளில் அரியின் மருகன்
உலகில் உகந்த உலப்பிலா ஆனந்
தலகில் சோதியன் அறுமுகத் தண்ணல்
உலகில் உதித்தனன் ஒருதிரு முருகாய்

37. சந்நிதி ஆற்றம் சரிந்த பூவர
சந்திவ் யமுருகு சான்நித் யமாகியும்
எந்நிதி யெவர்க்கும் எக்காலத்தும்
வந்திப் பார்க்கவர் வாரிவ ளங்குவர்

38. அன்னதா னக்கந் தனென்றும் அறுமுகன்
உன்னத மாயெவர்க் குமவந் தேத்தும்
உன்னத பக்தர் உளமுள மாகியும்
பின்னமி லாதவர் பேறளித் தருளுவர்

39. கந்தபு ராணமும் கண்ணகை கதையும்
கந்தர் ஷஷ்டி கவசமும் கார்த்திகை
அந்தராத் மஅனுட் டானங் களைசிவ
தந்திர மாகஅ றுபத்திநான் காக்குவர்

40. அடியவர் சந்நிதி அடியவர்க் ஆகிடும்
அடியவர் அறுபத்து முன்றுநாயன்மார்
பிடிபடும் சூசன பிரிவிலா சிவாலய
அடிநா தமாகநந் தியிருந் தேத்தும்

41. அறுபத் திநான்கா லிலையில் நிவேதனம்
அறுமுக னுக்கும் அடியவர்க்கடியரின்
அறுபத் துமூன்றும் அனுதின பூசை
உறும்பத் தியாளர்க் குறும்வீ டுபேறே!

42. கதிர்கா மக்கரு கணிப்போ டிங்கும்
உதிர்சொல் மறைக்கும் உதடுமூ டுதுணியும்
எதிர்வார்த் தையில் லாதெழில் பத்திமை
புதிர்போ லாகும் புத்துயிர் கொடுக்கும்

43. பக்திநெ றியில்பழுத்த பண்புடன் பகிரும்
சித்தியால் சித்தர் நெறியும் சிறந்திட
சித்திபுத் திகொண்டவிக் னவிநா யகன்தம்
பித்தண் டைக்கா லைத்தலை யேற்று

44. பத்தியும் சித்தமும் பக்குவர் பகர்ந்திடும்
தத்துவம் சித்தாந் தப்பிழி சாறாம்
தத்துவக் கலைமணி தமிழ்பாட் டியௌவை
பொத்தினாள் வாயுன் பொருட்பொதி தமிழால்

45. சந்நிதி வேல்சென் றுகதிர் காமத்
தந்தமில் கொடியே றிநல்லூ ருடுவரும்
சிந்தை குளிர்ஜ திகமுல கற்புதம்
எந்தை தந்தை வழியேற் றினார்களே!

46. மாலும் மயங்கி மலையும் உருவிட
வேலும் விடவல சேவல் கொடியன்
நாலுவே தமறியா நாமூ கரத்தன்
பாலும் தேனும் பாறும.·. தினியன்

47. நீலம யிலன்அறு நெற்றியின் கண்ணன்
கோலக் குறத்திதெய் வயானை கணவன்
காலம் கலியனைக் காலால் உதைப்பன்
ஞாலம் போற்றிடு திருமால் மருகன்

48. மானம் கெட்டேன் மதிகெட் டேன்மனத்
தானம் உற்றும் தயைதுதைந் தருள்மெய்
ஞானம் பெற்றுய் யவுன்பா தம்தரு
மோனம் இசைத்து மயக்கற அருள்தா

49. கானம் இசைக்கும் குயிலாய் காரிருள்
வானம் கண்டம யிலாய்நான் இசைவுள்
ஞானம் பெற்றுமெய் ஞானபண் டிதவுன்
வானுயர் விஸ்வரூ பவடிவைக் காட்டிடு

50. பிறப்புஅ றுமேபிறந் தபயனும் உறுமே
சிறப்புச் சண்முகன் சிற்றடி தலைமேல்
இறங்கியி ருக்கஇ னிதருள் சுரக்கப்
பறங்கிம லையின் பூசைப் பணிபலன்.

51. திருவாய்த் திரண்டவென் தெருளைப் புடமிட்
டருளுவாய் திரட்டிம யிலாய்பறந் தவெனைக்
குருவாய் வந்தாண் டதிருவே திருமால்
மருகே மன்றுளா டிமகனே போற்றியே!

52. பொய்வே டத்திற் குமாலை யிடுமிப்
பொய்யுல கில்முரு கன்அடி யவர்தம்
நெய்யுரு குபக்தியில் சித்தர் சிவணிய
மெய்த்தத் துவத்தினுள் துதைந்தார் துயரறும்

## நூற்பயன்

1. அன்றுமின் றென்றும் அன்பர் உள்புறம்
குன்றின் குமரன் குடிகொள் வதுண்மை
கன்றுப யிர்காய் கனிஉள திலதொளி
யென்றும் வெழியாய் எழில்வே லருளே!

2. அதுவும் இதுவும் எதுவும் ஆனான்
புதுமை புகட்டும் பூரணன் மருகன்
பொதுமைப் பிறப்பின் பொதிவி னையற
பதுமை யிருவர் பங்கன ருள்வான்

3. அதுவும் இதுவும் எதுவும் அவனென
உதுவே யவனருள் உள்வெளி இசையொளி
அதுவே வருகுரு அருள்தரு சிவகுரு
இதுவே கலியகல் திருவுள முருகே

4. சூசனம் விளங்க சூக்குமம் வேண்டும்
ஆசனத் திருந்து ஆக்கும் யோகம்
போசனத் திருந்தும் போக போக்கியம்
சூசனத் திருவின் தீர்க்கம் ஆகுமே.

5. பொய்லே டத்திற் குமாலை யிடுமிப்
பொய்யுல கில்முரு கன்அடி யவர்தம்
நெய்யுரு குபக்தியில் சித்தர் சிவணிய
மெயக்கத் துவத்தினுள் துதைந்தார் துயரறும்.

6. முருகா போற்றியென் முதலே போற்றியோம்
குருவே போற்றியென் முழுமுதல் போற்றிமால்
மருகே போற்றியென் மயக்கறு மாதூ
அருளே போற்றி ஐயா போற்றி(யோம்)

ஐந்து கரத்தன் நான்கு புஜத்தன்
ஆதிசய வேழத் திருமுகத் தையன்
சங்கர னுறைரத மச்சது பொடிசெயு
சக்தியு மையின் மஞ்சளின் மகனே
சங்கம் முழங்கச் சுவிஸ்நா டதனில்
சரவண பவமுக முருகன் பக்தி
எங்கும் முழங்க எடுத்தமா நாட்டில்
என்புல் லறிவால் எடுத்தோ தியபா
பங்கமில் பயன்தரு பாங்கில் விநாயகன்
பரிந்தருள் புரியப் பாவும் விரிந்ததே
சங்கமும் சிறந்ததே சார்பும் பெற்றதே
சாம்பிண மாமுன் ஜீவன் முத்தரே!

முற்றும்

திவ்யாதங்கன்
வ.ஆ.தங்கமயில். (முதுகலைமாணி சித்தாந்தம் - இலங்கை)
பண்டிதர், சைவப்புலவர், சித்தாந்த பண்டிதர், Dip in Civil Engineering, Dip in Psy, Dip in HRD, Quantity Surveyor, Registered Licensed Surveyor &Leveller & Valuer FSI (Srilanka), A.M.S.S.T (UK)
தாரிக்கப்பற்று,
வதிரி,
கரவெட்டி,
வடமராட்சி.
யாழ்ப்பாணம்,
இலங்கை.

(31.01.2014 அனுப்பியதற்கான திருத்திய பதிப்பு )

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | ஸ்ரீ | | | | | | | |
| | | | | | | கா | ல | தி | | | | | | |
| | | | | க | ண் | ட | ஸ்ரீ | சி | வ | ன் | | | | |
| | | | ல | நீ | தா | ந் | ந | ல் | வ | ய | ம | | | |
| | | ரே | சூ | ச | ன | சொ | ல் | ல | ரி | ய | நீ | ர் | | |
| | ம | கு | க் | சூ | ம் | று | லூ | ல் | சொ | னே | வ | ல | வே | |
| ள | சி | வ | கு | ரு | ப | ர | ர் | சி | ங் | கா | ர | ச் | சீ | ர் |
| | ரா | சீ | த | ந் | டி | க | க் | ரை | க | மு | க | ங் | சி | |
| | க் | கு | ம் | சூ | ர் | மு | க | ன் | க | ய | மு | க | ன் | |
| | | ர் | தீ | னை | வி | த | ந் | ப | ம் | ள | ரா | தீ | | |
| | | | னை | வ | ள் | ளி | த | ம் | ப | தி | யே | | | |
| | | | | யா | வ | தே | னே | க | ரு | மு | | | | |

தே ர்

தேர்முருக னேதேவ யானைவள்ளி தம்பதியே

தீராளம் பந்தவினை தீர்க்கும்

சூர்முகன் கயமுகன் சிங்கமுகரைக் கடிந்த

சீராள,சிவகுருபரர் சிங்காரச்

சீர்வேல வனேசொல் லூறும்

சூக்குமரே சூசன சொல்லரிய

நீர்மயவல் நந்தா நீலகண்டசிவன்

திலகா ஸ்ரீலஸ்ரீ நல்லூர்க் கந்தனே.

## இராகம் - சண்முகப்பிரியா

### பல்லவி

விளையாட்டு எந்நேரமும் முருகா
என்நெஞ்சில் நிலையான மகிழ்வூட்டி - (விளை)

### அனுபல்லவி

வினைவந்து எனைவாட்ட முருகா
விதிமுட்டி மதிஏய்க்க உனைநாடி வந்தேன் - (விளை)

### சரணம் I

விரித்தோகை மயில்மீது இருத்தேவிபுடைசூழ
ஒருக்கால் நீவரவேண்டுமே உன்இருகாலைத் தொழவேண்டுமே - (விளை)

### சரணம் II

திருமாலின் மருகல்லவோ சிவகுருவான பொருளல்லவோ
அருவாயு முருவாயு மதுவாயு மிதுவான
குருநாதன் நீயல்லவோ எந்நெஞ்சில்
இருக்காது ஒழிந்தோடவோ - (விளை)

### சரணம் III

ஒருக்காலும் முடியாது முடியாதுவே
இருக்காமல் எந்நெஞ்சில் ஒழிந்தோடவோ
தருக்காது ஓடோடி வருவாயேநீ
முருகன் திருப்பாதத் துணைவேண்டியழும் என்னில் - (விளை)

பல்லவி

ஏன்துள்ளிச் சென்றீர் ஐயா வேல்முருகையா
ஏன்துள்ளிச் சென்றீர் ஐயா - ஏன் துள்ளி

அனுபல்லவி

தேங்கிப் பூத்திருக்கும் சரவண மதிலே
தேங்கு பயோதர வமுதருந்திய நீ (கனிக்கோ) - ஏன் துள்ளி

சரணம்


1. நாரதனின் வம்பை முறிப்பதற்கோ
விநாயகன் வெற்றியை பறிப்பதற்கோ
ஈசன் சொல்லை வரிப்பதற்கோ
பரமேஸ்வரி மனதை யரிப்பதற்கோ - ஏன் துள்ளி

2. காசினிலௌவை சல்வியி லுயர்ந்துகளி மிகக்கூர்ந்திடவோ
மாசிலாத பழனிமலை மீதுயர் பக்திப்பழம் நீயாயிடவோ
வாசியால்வரு மாந்தருய்த்திட வருதிருகுருமுருகாகிடவோ
நாசியோடு நூலாசியிரு ப்பவர் கூட்டிமேலுறு வீடேற்றிடவோ
- ஏன் துள்ளி

3. விரைந்தோ, வேளத்தால் வள்ளியை வரைந்தோ
வானவர் குறை கரைத்தோ, சூரன்பதுமர்மார் பிரித்தோ
மால்மருக னென்று தேவயானையை வள்ளியை மணக்கவென்றோ
வாலறிவுற அரிணகிரி தங்கனை யருளப் பிந்துமென்றோ
தேவயானையை யணைய வேண்டுமென்றோ - ஏன் துள்ளி

உசாத்துணை நூல்கள் :-

1. உசாத்துணை நூல்கள் உள்வெளி இறையாம்
2. உசாத்துணை நூல்கள் உளதில பொறையாம்
3. உசாத்துணை நூல்கள் இறையுள ஒளிர்வாம்
4. உசாத்துணை நூல்களா தங்கனின் தயவாம்



## மாதங்களின் பெயர்கள்

| நடைமுறைப் பெயர் | ஸங்கல்பத்தில் கூறவேண்டியது |
|---|---|
| சித்திரை | மேஷ மாஸம் |
| வைகாசி | ரிஷப மாஸம் |
| ஆனி | மிதுன மாஸம் |
| ஆடி | கடக மாஸம் |
| ஆவணி | சிம்ம மாஸம் |
| புரட்டாசி | கன்னி மாஸம் |
| ஐப்பசி | துலா மாஸம் |
| கார்த்திகை | விருச்சிக மாஸம் |
| மார்கழி | தனுர் மாஸம் |
| தை | மகர மாஸம் |
| மாசி | கும்ப மாஸம் |
| பங்குனி | மீன மாஸம் |

எந்த மாஸத்தில் பூர்ணிமை அமாவாஸ்யை இல்லையே அந்த மாஸத்திற்கு விஷமாஸம் என்று பெயர்.

எந்த மாஸத்தில் இரண்டு பூர்ணிமையோ, இரண்டு அமாவாஸ்யையோ வருகிறதோ அதற்கு மலமாஸம் என்று பெயர்.

விஷ மாஸத்திலும், மல மாஸத்திலும் சுபகார்யங்களை விலக்க வேண்டும்.

ஆனால் சித்திரை, வைகாசி மாதத்தில் இவை நிகழுமானால் அந்த இரு மாதங்களுக்கும் இந்த தோஷம் கிடையாது.

ஆதாரம்
எளிய ஆகம பூசை முறை



சத்தியா பிறிண்டேர்ஸ், யாழ். 0771386661